நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாவட்ட தடகளப் போட்டிகள்!

# வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் - சான்றிதழ்கள்!

## மு. அப்பாவு வழங்கினார்! ரூபி மனோகரன் எம்.எல்.ஏ.- மேயர் கோ. இராமகிருஷ்ணன் முன்னிலை!

நெல்லை, அக்.24-

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற வருவாய் மாவட்ட தடகள போட்டிகள் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன்,மாநகராட்சி மேயர்.கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

அப்போது பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது:-

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர்கள்,கிராமப்புற இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வமாக செயல்பட வேண்டும் என்பதற்காக விளையாட்டு துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து அதிகமான நிதியினை ஒதுக்கீடு செய்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து விளையாட்டு வீரர்களை ஊக்குப்படுத்தி வருகிறார்கள்.

2024-2025 ஆம் ஆண்டிற்கான மாவட்ட, மண்டல அளவிலான விளையாட்டு முதலமைச்சர் அவர்களின் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் பள்ளி,கல்லூரி,பொது, மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5பிரிவுகளாக நெல்லை மாவட்டத்தில் பல்வேறு மையங்களில் நடைபெற்றது.இதில் மாவட்ட அளவில் தனிநபர் விளையாட்டில் முதலிடம் பெற்றவர்களும் குழு விளையாட்டில் தேர்வு செய்யப்பட்டவர்களும் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகிறார்கள்.

கிராம இளைஞர்கள் விளையாட்டில் சிறப்பாக விளங்க வேண்டும் என்பதற்காக கலைஞர் விளையாட்டு உபகரணங்களை முதலமைச்சர் அவர்கள் ஊராட்சிகளுக்கு வழங்கி வருகிறார்கள் இளைஞர்கள் விளையாட்டில் நல்ல ஆர்வமாக செயல்படுவதற்கு கலைஞர் அவர்கள் விளையாட்டு உபகரணங்கள் முக்கியத்துவமாக அமையும்.

இளைஞர்கள் விளையாட்டில் அதிகமாக கவனம் செலுத்துவதால் அவர்களது உடல் ஆரோக்கியமாக இருக்கும். விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்திக் கொண்டு உங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

நெல்லை மாவட்டத்தில் உலகதரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க இராதாபுரம் வட்டம் ம் விஜயாபதி அருகே இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமான பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார், மாவட்ட விளையாட்டு நல அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி, மாவட்ட கல்வி அலுவலர்கள் சாய் சுப்புலட்சுமி (இடைநிலை)தீபிகா ராணி (மெட்ரிக்) சின்ன ராணி சங்கீதா(தொடக்கக்கல்வி) சீலாத்திகுளம் ஊராட்சி தலைவர் சந்தனமாரி வேணு கோபால்,துணைத் தலைவர் தில்லை கிருஷ்ணன், கும்பிவளம் ஒன்றிய கவுன்சிலர் காந்திமதி,ஒன்றிய செயலாளர் உறுப்பினர் ஜோசப்பெல்சி,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக் உட்பட அரசு அலுவலர்கள்,ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் விளையாட்டு உறுதிமொழியினை வீரர்கள் அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தலைமை! தீப ஒளியை முன்னிட்டு

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் கழகத்தினருக்கு புத்தாடை இனிப்பு!

## கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி.- நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

கன்னியாகுமரி, அக்.24-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள் ஆலோசனைக் கூட்டம் (19.10.2024 சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தி.மு.க. மாநில மருத்துவர் அணி தலைவருமான மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு, ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தி.மு.க. மாநில மருத்துவர் அணிச் செயலாளரு மான மருத்துவர் எழிலன் நாகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோருக்கு புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த்,

ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஆ.லிவிங்ஸ்டன்,ஏ.சுரேந்திர குமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், நகர செயலாளர் என்.நாகூர்கான்,

பகுதிச் செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, என். பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட பேரூர் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட மற்றும் நாகர்கோவில் மாநகர அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து சார்பில் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சொக்கம்பட்டி ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து ரூபாய் 50 லட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு,ரூபாய் 30 லட்சம் மதிப்பில் இக்பால் நகர் துணை சுகாதார நிலையம்,ரூபாய் 35 லட்சம் மதிப்பில் நாடார்பட்டி துணை சுகாதார நிலையம்,ரூபாய் 35 லட்சம் மதிப்பில் இராமநாதபுரம் துணை சுகாதார நிலையம்,ரூபாய் 35 லட்சம் மதிப்பில் சுப்பிரமணியபுரம் துணை சுகாதார நிலையம்,ரூபாய் 35 லட்சம் மதிப்பில் ஓடை மறிச்சான் துணை சுகாதார நிலையம் ஆக மொத்தம் ரூபாய் 2.20 கோடி செலவில் புதிய கட்டிடங்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். இராமச் சந்திரன்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்,மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர்,தென்காசி மக்களவை உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார்,சட்டமன்ற உறுப்பினர் ராஜா, சதன் திருமலை குமார்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி நூர்ஜகான் பேகம்
### அக்டோபர் 24 (2018)



கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.

திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு "நீதிகேட்டு நெடும் பயணம்" சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் "கலைஞர் விருதினை"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மக்கள் நலத் திட்டங்கள் தொடர

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும்!

## சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக்.24-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்கான 2026 தேர்தல் பணிகள் குறித்த செயல்வீரர்கள் கூட்டம் மானாமதுரையில் சாந்தி முருகன் திருமண மண்டபத்திலும், சிவகங்கை ஆர்.எம்.ஆர். திருமண மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ., முன்னிலையில் நடைபெற்றது. நகர கழக செயலாளர்கள் க.பொன்னுச் சாமி,சி. எம்.துரை.ஆனந்த், ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் ஆர். கே.என். போஸ் மானாமதுரை, புதுக்கோட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சண்முகம் சிவகங்கை ஆகியோர் கலந்து கொண்டு வருகிற 2026 தேர்தலில் ஆற்ற வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து விளக்கி பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது . கழக தலைவர் தளபதி அவர்கள் கழக தலைவராக பதவி ஏற்ற நாளில் இருந்து தொடர்ந்து வெற்றியினை பெற்று வருகிறார். பாராளுமன்ற தேர்தலில் வெற்றி, உள்ளாட்சி தேர்தலில் வெற்றி, தொடர்ந்து சட்டமன்றத் தேர்தலில் வெற்றி. இதற்கு காரணம் கழகத்தலைவர் தளபதி அவர்கள் அமைத்த வலிமையான கூட்டணி காரணம் ஆகும் அத்துடன் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய முதல்வர் தலைமையில் கூட்டணி மிகவும் வலுவாக மக்களை சந்தித்து வருகிறது .

மக்களும் நமது கூட்டணிக்கு அதிக அளவில் ஆதரவினை தந்துவருகிறார்கள். இந்த ஆதரவு தொடர வேண்டும்.10. ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியை மக்கள் விரும்பவில்லை அதற்கு காரணம் அவர்கள் மக்கள் நலத் திட்டங்கள் எதையும் செயல்படுத்த வில்லை . தமிழக முதல்வர் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் தினசரி ஒரு திட்டங்களை அறிவித்து மக்களுக்கான பயன்களை செய்து வருகிறார்.

மக்கள் இத்தகைய திட்டத்தினால் பயன் அடைந்து வருகிறார்கள். குறிப்பாக பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி பெண்களின் முன்னேற்றத்திற்கும், அவர்கள் வாழ்வாதாரத்திற்கு ம் வழி வகுத்து வருகிறார். 2026சட்டமன்ற தேர்தலில் இத்தகைய வெற்றி தொடர வேண்டும். அதற்கு தலைவர் தளபதி அவர்கள் 200 தொகுதிகளில் தி.மு.க .கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறார்.

அந்த வெற்றியில்100 சதவீதம் சிவகங்கை மாவட்டத்தில் பெறவேண்டும் .நான்கு தொகுதிகளிலும் 100% வெற்றி பெற வேண்டும் அதற்கு இப்பொழுது முதல் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் பணியாற்றிட வேண்டும் . தளபதி தலைமையிலான திராவிட மாடல்அரசின்திட்டங்களை மக்களிடம் எடுத்துக்கூற வேண்டும் .நமது தேர்தல் பணியினை மேலும் தீவிரப்படுத்துவ தற்காக சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள். அவர்கள் கூறும் ஆலோசனையினை ஏற்று அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு தர வேண்டும். ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருகிறது. கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க ஆட்சியினை ஒன்றிய அரசு வஞ்சித்தபோது எதிர்த்து குரல் கொடுத்தது கழகம். கழகதலைவர் அவர்கள்தான்.

தற்பொழுது நம் ஆட்சிக்கு வந்ததும் ஒன்றிய



அரசு நிதி மற்றும் பல்வேறு வகைகளில் நமது உரிமைகளை பறித்து தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டு வருகிறது. கழக தலைவர் தளபதி அவர்கள் அதை எதிர்த்து குரல் கொடுத்துவருகிறார். ஆனால் ஒன்றிய அரசு செவிசாய்க்க வில்லை. தமிழகமக்களுக்காக பல்வேறு வழிகளில் நிதியினை திரட்டி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இத்தகைய மக்கள் நலத்திட்டங்கள் தொடர வேண்டுமானால் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சி தொடர வேண்டும். அதற்கு அனைத்து தரப்பினரும் அதிக அளவில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம் .எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் துரை. ராஜா. மணி எம்.அண்ணா துரை, எம். ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம் நா.நெடுஞ் செழியன், யோக.கிருஸ்ணகுமார், வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், வே.ஆரோக்கிய சாமி, ஆர். எம். கென்னடி, ஆறு. செல்வராஜன், கடம்ப சாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன் பேரூர் கழக செயலாளர்கள் நாகூர்கனி , பி.ஏ.நஜ்மூதீன், ஜெயராமன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் துணை அமைப்பாளர்கள் கே.எம். பொற்கோ, மதிவாணன், கார்த்தி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதாஅண்ணா துரை, துணைத் தலைவர் முத்துச்சாமி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா திலகவதி கண்ணன், மானாமதுரை நகர் மன்ற துணை தலைவர் பாலா சுந்தர், பொதுக்குழு உறுப்பினர் கள் கரு. அசோகன், ஏஆர்.ஜெயமூர்த்தி ஒன்றியதுணை செயலாளர் முத்துகுமார் உட்பட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பல்வேறு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கழகத்தினருக்கு மருத்துவர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., மருத்துவர் நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. புத்தாடை மற்றும் இனிப்புகளை வழங்கினர். கூட்டத்தில் ஹெலன் டேவிட்சன், எப்.எம்.இராஜரெத்தினம், வழக்கறிஞர் ப.ஆனந்த், எம்.மதியழகன், மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், என்.நாகூர்கான், இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் சார்பில் செயல் வீரர் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் பி.டி. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி., சிறப்புரை ஆற்றினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம் போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அர. நடராசன்
### அக்டோபர் 24 (1987)



இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.